**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 29.08.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், உலக காய்கறிகள் நிறுவனத்துடன் ஆராய்ச்சி ஒப்பந்தம்**

பயிர் பாதுகாப்பு மையம் , தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் , கோயமுத்தூர் மற்றும் உலக காய்கறிகள் நிறுவனம் , தைவான் ஆகியவை காய்கறிப்பயிர்களி ல் பயிர் பாதுகாப்பு ஆராய்ச்சி ஒப்பந்தம் மேற்கொண்டது. இந்த ஒப்பந்தம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி மற்றும் உலக காய்கறிகள் நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் ரா.சீனிவாசன் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. வேளாண் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் அவர்கள் உலக ஆராய்ச்சி நிறுவங்களுடன் இணைந்து விவசாய தொழில் நுட்பங்களை உருவாக்குவதன் அவசியத்தை ப் பற்றியும் மேலும் காலநிலை முன்னறிவிப்பி ல் உலக ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றிய அனுபவத்தை பற்றியும் எடுத்துரைத்தார் . பயிர் பாதுகாப்பில் காலநிலை முன்னறிவிப்பின் முக்கியத்துவத்தை பற்றியும் மற்றும் இடு பொருள் செலவினை குறைக்கும் தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துவதின் அவசியத்தை பற்றியும் வலியுறுத்தினார்

வேளாண் பூச்சியியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் செ. வ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தன்னுடைய வரவேற்புரையில் அயல் நாட்டு பூச்சிகளான படைப்புழு, தக்காளி ஊசி புழு மற்றும் ருகோஸ் வெள்ளை சுருள் ஈ ஆகியவற்றை கட்டுப்படுத்த பல்கலைக்கழகம் மேற்கொண்ட முயற்ச்சிகளை பற்றியும் விளக்கினார். உலக காய்கறிகள் நிறுவனத்துடன் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மேற்கொள்ளப்போகும் ஆராய்ச்சிகளை பற்றியும் கூறினார்.

முனைவர் மூ. சாந்தி, இயக்குனர், பயிர் பாதுகாப்பு மையம் அவர்கள் இந்த ஆராய்ச்சி ஒப்பந்த திட்டத்தில் மேற்கொள்ளப்போகும் பணிகளை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். மேலும் காய்கறிப்பயிர்களில் ஒட்டு கட்டுதல் தொழில்நுட்பம் தக்காளியில் பாக்டீரியா நோயால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்க இயலும் என்றார். தக்காளி மற்றும் அவரையில் ஒருங்கிணைத்த பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு செலவு குறைந்த தொழில் நுட்பங்கள் வழங்கப்படும் என்றார்.

வேளாண் விரிவாக்க இயக்குனர் முனைவர் பி.பொ.முருகன் அவர்கள் இந்த திட்டத்தின் மூலம் சுமார் 1600 விவசாயிகளுக்கு தக்காளி மற்றும் அவரையில் ஒருங்கிணைத்த பயிர் பாதுகாப்பு பயிற்சி அளிக்கப்படும் என்றார்.

உலக காய்கறிகள் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் ரா. சீனிவாசன் அவர்கள் பயிர்களில் தோன்றும் பாதிப்புகளை விவசாயிகளின் பங்களிப்புடன் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் மூலம் எளிதாக கையாளலாம் என்றார். உலக காய்கறிகள் ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்பங்கள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மூலம் கொண்டு சேர்க்கப்படும் என்று உறுதி அளித்தார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவாக்க கல்வி இயக்குனர் முனைவர் ச. உத்தமசாமி அவர்கள் தொழில் நுட்பங்கள் சரியான சமயத்தில் கொண்டு சேர்ப்பதின் முக்கியத்துவத்தை பற்றி வலியுறுத்தினார். பயிர் நோயியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கார்த்திகேயன் அவர்கள் உலக காய்கறிகள் நிறுவனம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துடன் ஆராய்ச்சி ஒப்பந்தம் மேற்கொண்டதற்கு அனைவரின் சார்பாக நன்றியை கூறினார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நிகழ்வாக உலக காய்கறிகள் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர் ரா. சீனிவாசன் அவர்கள் எழுதிய "ஆறு கால் அதிசயங்கள்" என்ற புத்தகத்தை துணை வேந்தர் முனைவர் வெ. கீதாலட்சுமி அவர்கள் வெளியிட்டார். இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக தொண்டாமுத்தூர் மற்றும் தேவராயபுரம் பகுதியை சார்ந்த சுமார் 30 விவசாயிகளுக்கு தக்காளியில் ஒட்டு கட்டுதல் தொழில் நுட்ப செயல்விளக்கத்தை உலக காய்கறிகள் ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானி முனைவர் மா.இரவிசங்கர் அவர்கள் வழங்கினார்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***